DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 597/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 6 P.W.4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமசாமி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | வேலுசாமி தேவர் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 21.01.2026.

**எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் தாந்தோணியில் வசித்து வருகிறேன். பூசணிக்காய் வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 21.10.2024 ம் தேதி மல்லிகா என்பவர் வீட்டில் திருடுபோயிருந்தது. மல்லிகா என்பவரின் வீட்டின் அருகில் என் வீடு உள்ளது. நான் மறுநாள் வந்த போது போலிசார் அங்கு வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். என் வீட்டையும், சின்னப்பன் வீட்டையும், மகேஷ் வீட்டையும் குறிப்பிட்ட ஆவணத்தில் ஆதரவாக சாட்சி கையொப்பம் கேட்டாரகள். நானும் இன்னொரு சொந்த காரப்பையனும சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகசர் அசா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நீங்களும் தாந்தோணி தான் என்றால் சரிதான், மல்லிகா வீட்டின் எந்த பகுதியில் குடியிருந்து வருகிறிர்கள் என்றால் ஒரே காம்பவுண்ட

சுவர் தான். மல்லிகா என்ன உறவு என்றால் பக்கத்து வீட்டுககாரர், ஒரே ஜாதி அவ்வளவு தான். 30–40 வருடங்கள் நீங்கள் அங்கு வசித்துவருகிறிர்கள் என்றால் நான் பிறந்ததில் இருந்துஅங்கு உள்ளேள் மல்லிகா 15 வருடமாக அங்கு வசித்து வருகிறார். போலிசார் இருத்ததாக சொல்லியுள்ள நிலையில் ஆண் போலிசார் இருந்தார்களா அல்லது பெண் போலிசார் இருந்தார்களா என்றால் ஆண் போலிசார், 2–3 பேர் இருந்தார்கள். கையெழுத்து போட்ட ஆவணத்தில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். என்ன தெரிந்து கொண்டிர்கள் என்றால் வீட்டை ஸ்கெட்ச் போட்டு வரைந்து இருந்தார்கள். உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து விட்டு தற்போது போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் இல்லை. எந்த இடத்தில் வைத்து திருட்டு நடந்ததாக தெரிந்து கொண்டிர்களா என்றால் தெரியாது.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | | | |
|---|---|---|---|---|
| Calender | : | CC No. 597/2025 | | |
| Miscellaneous | : | | | |
| Preliminary Register | : | | | |
| Sessions | : | | | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.8 | P.W.5 | |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | பாலகிருஷ்ணன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | திருமூரத்திகவுண்டர் | ஜாதி | : |
| கிராமம் | : | | இனம் | : |
| தாலூக்கா | : | | வயது | : |
| Mail ID | : | | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 21.01.2026.

**எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் தாந்தோணியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு மல்லிகா வீட்டில் திருட்டு போனது பற்றி தெரியும். பணம் திருட்டு போனது பற்றி தெரியும். போலிசார் எதிரியை கைது செய்ததாக சொன்னதன் பேரில் நான் உடுமலை காவல் நிலையம் சென்றேன். அங்கு சென்ற போது எதிரி மல்லிகா வீட்டில் திருடிய பணத்தை செலவு செய்து விட்டதாகவும் கூறினார். போலிசார் வாக்குமூலம் பதிவு செய்து சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நானும் இன்னொருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து அசா.ஆ.3 என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. தாந்தோணியில் குடியிருந்து வருகிறிர்கள் என்றால் ஆமாம். மல்லிகா என்ன உறவு என்றால் அத்தைமருமகள் ஆவார். காவல் நிலையம் நீங்கள் வந்த போது ஆஜர் எதிரி அங்கு இருந்தாரா என்றால் ஆமாம். அவரை எங்கிருந்து கைது செய்து கொண்டு வந்தததாக சொன்னார்கள் என்றால் கேரளாவிலிருந்து. குறிப்பிட்டு எந்த இடம் என்றால் அது பற்றி தெரியாது. நீங்கள் காவல் நிலையம் வரும் போது அவர் பேசியதை மொழிபெயர்க்க யாரேனும் இருந்தார்களா என்றால் இல்லை. அவர் மலையாளி என்பதால் அவருக்கு தமிழ் தெரியாது என்றால் அவர் பேசியதை நான் பார்க்கவில்லை. வாக்குமூலம் சொன்னது என்ன மொழியில் சொன்னார் என்ன விவரம் தெரியாது என்றால் ஆமாம். கையெழுத்து போட்ட ஆவணத்தில் உள்ள விவரம் தெரியாது என்றால் கொஞ்சம் கொஞ்சம் தெரியும், என் முன்னிலையில் எழுதினார்கள், என்ன என்று தெரியவில்லை. எதிரியை கைது செய்தது கேரளாவில் கைது செய்து வாக்குமூலம் எதுவும் பெறாமல் போலிசார் அவர்களாகவே வாக்குமூலம எழுதிவிட்டு தற்போது நீஙகள மல்லிகா ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல.
2. அவர் திருடியதை யாரேனும் பார்த்தார்களா என்றால் யாரும் பார்க்கவில்லை. சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்றாலும எதிரியிடம் சொன்னதுபோல் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும் மல்லிகா உங்கள் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்களா என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 597/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.9 P.W.6 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரங்கசாமி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | சென்னிமலை | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 21.01.2026.

**எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் RG புதூரில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். 2024 ம் வருடம் நான் ஒரம்பரையாக மல்லிகா வீட்டிற்கு வந்த போது மல்லிகா வீட்டின் கதவை உடைத்து பணம் திருடு போயிருந்தது. போலிசார் வந்து விசாரித்து சென்றார்கள் . அதன் பின்னர் திருடிய எதிரியை கைது செய்ததாக போலீசார் எங்களை அழைத்தார்கள் போன மாதம் செய்ததாக போலீசார் கூறினார்கள். போன மாதம் போலிசார் எங்களை அழைத்தார்கள். எதிரியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். நானும் பாலகிருஷ்ணன் என்பவரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து அசா.ஆ.4 என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. போன மாதம் தான் காவல்நிலையம் அழைத்தார்கள் என்றால் ஆமாம்.

டிசம்பர் மாதம் என்றால் ஆமாம். யார் யார் சென்றிர்களா என்றால் நானும் பாலகிருஷ்ணன் என்பவரும் சென்றோம். மல்லிகா வீட்டில் யார் திருடினார் என்ற விவரம்தெரியாது என்றால் தெரியாது. கையெழுத்து போட்ட ஆவணம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் காவல்நிலையத்தில் வைத்து. யார் எழுதினார்கள் என்றால் போலிசார் எழுதினார். யாரிடம் விசாரித்தார்கள் என்றால் என்னிடம் தான் விசாரித்தார்கள். உங்களை விசாரித்து எழுதி வாக்குமூலம் வாங்கியதில் தான் கையொப்பம் பெற்றார்கள் என்றால் ஆமாம். படித்து பார்த்து தான் கையெழுத்து செய்திர்கள் என்றால் ஆமாம். ஆஜர் எதிரியிடம் கையெழுத்து பெற்றார்களா என்றால் தெரியவில்லை. சம்பவத்தை பற்றி தெரியாது என்றாலும் மல்லிகாவிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 597/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.5 P.W.7 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முத்துகுமார் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சுப்பிரமணியம் | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலுக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 21.01.2026.

**எதிரி நீதிமன்ற காலலில் இருந்து ஆஜர் படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருப்பூர் மாவட்ட தனி விரல் ரேகை பிரிவில் காவல் உதவிஆய்வாளரகா பணிபுரிந்துவருகிறேன். கடந்த 23.10.2024 ம் தேதி நான் நிலைய அலுவலில் இருந்த போது கிடைத்த தகவலின் பேரில் 23.10.2024 ம் தேதியன்று மாலை 6.30 மணியளவில் உடுமலை காவல் நிலையம் குற்ற எண் 711/2024 ச/பி 331(3), 305(a) BNS வழக்கில் சம்பவ இடம் சென்றேன். சம்பவ இடத்தை புலன் விசாரணை அதிகாரி கிருஷ்ணமூர்த்தி அடையாளம் காட்டினார். மேற்படி அந்த முகவரி 264, மைவாடி ரோடு தாந்தோணி உடுமலை ஆகும். இந்த முகவரிக்கு தான் சென்றோம். அந்த வீட்டின் உள்ளே சென்ற போது வீட்டில் இருந்த பீரோவில் தெளிவு செய்யயப்பட்ட விரல் ரேகை ஒன்றை கைப்பற்றி அதறகு S –1 என்று குறியீடு செய்தேன்.
2. பின்னர் வீட்டிலிருந்த மல்லிகா மற்றும் செல்வகுமார் ஆகியோரின் விரல் ரேகையயும் எடுத்தேன். பின்னர் அலுவலகம் சென்று S–1 என்று குறியீடு செய்யயப்பட்ட விரல் ரேகையுடன் வீட்டில்

இருந்தவர்களின் எடுக்கப்பட்ட விரல் ரேகையை ஒப்பீடு செய்த போது அது ஒத்துப்போகவில்லை. பின்னர் மென்பொருளில் S–1 விரல் ரேகை குறியீட்டை உள்ளீடு செய்து ஒப்பிட்டு பார்த்த போது அந்த கைரேகை ஆஜர் எதிரி அபிராஜ் த/பெ சுனில் ராஜ் என்பவரின் இடது பெருவிரல் ரேகையுடன் ஒத்து போனது. அந்த விரல் ரேகை கேரளாவில் ஆலத்துார் காவல நிலையம் குற்ற எண்ணுடன் ஒத்துபோனது.

3. மேற்படி ஒப்பீடு விவரங்களை Visiting ரிபோர்ட் –1 மற்றும் வீட்டின் உள்ளவரின அறிக்கை மற்றும் ஒத்து போன விரல் ரேகை ஆகியவற்றை தயார் செய்து எங்களுடைய மேல் அதிகாரி காவல் துணை கண்காணிப்பாளர் அனுமதியுடன் கையொப்பம் பெற்று புலன் விசாரணை அதிகாரிக்கும் அதன் மூலமாக கனம் நீதிமன்றத்திற்கும் அனுப்பினேன். இது சம்பந்தமாக என்னை போலிசார் விசாரித்தார்கள். Visiting ரிபோர்ட் –1 அசா.ஆ. 5 என்றும், இனிமேட் ரிபோர்ட் அசா.ஆ.6 என்றும், நபிஸ் மென்பொருள் ஒப்பீட்டு விரல் ரேகை அறிக்கை அசா.ஆ .7 என்றும் குறியீடு செய்யப்படுகிறது. மென்பொருளில் ஒப்பீடு செய்ததில் 8 விதமான குறியீடுகள் ஒத்து போனது. இது சம்பந்தமாக என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மேற்படி விரல் ரேகையின் அறிக்கை நகல் இன்று எதிரிக்கு கொடுக்கப்பட்டதால் எதிரி தரப்பினர் வேண்டு கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 597/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 11 P.W.8 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | தனலட்சுமி | தொழில் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | வேலுகுடும்பர் | ஜாதி |
| கிராமம் | : | | இனம் |
| தாலூக்கா | : | | வயது |
| Mail ID | : | | Mobile No. |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 21.01.2026.

**எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது உடுமலை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.10.2024 ம் தேதி 16.00 மணிக்கு நான் நிலைய அலுவலில் இருந்த போது மல்லிகா க/பெ. செல்லமுத்து மைவாடி ரோடு தாந்தோணியை சேர்ந்தவர் நேரில் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று பரிசீலனைக்கு பின் நிலைய குற்ற எண் 711/2024 ச/பி 331(3), 305(a) BNS ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பார்வைக்கு வைத்தேன். முதல் தகவல் அறிக்கை அசா.ஆ.8 என குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. புகாரின் படி சம்பவம் நடந்தது 18.10.2024 என்றால் சரிதான். புகார் 23.10.2024 ம் தேதி கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். காலதாமதம் பற்றி அரசு தரப்பில் விளக்கம் சொல்லவில்லை என்றால் முதல் தகவல் அறிக்கையின் முன் பக்கத்தில் சொல்லவில்லை, முதல்

தகவல் அறிக்கையின் சங்கதியில் உள்ளது.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.